# குழை எடுத்தல் போட்டி நிபந்தனைகளும் விதிமுறைகளும்




- இது 10 நிமிடங்கள் கொண்ட ஒரு குழு விளையாட்டாகும்.
- ஒவ்வொரு குழுவிலும் 7 வீரர்களும் 3 உதிரி வீரர்களும் அடங்குவர்.
- நடுவரினால் போட்டிக்கு அழைப்பு விடுக்கப்பட்டதும் சம்பந்தப்பட்ட அணிகள் மைதானத்திற்குச் சமுகமளிக்கவேண்டும். மைதானத்தின் ஓடுபாதைப்பகுதியில் இவ்விளையாட்டு நடைபெறும்.
- ஒவ்வொரு அணி வீரர்களுக்கும் அவர்களுக்கான இலக்கங்கள் வழங்கப்படும்.
- போட்டி ஆரம்பமாகும் கணத்தில் ஒவ்வொரு அணியிலும் தலா 7 வீரர்கள் மேலே படத்தில் காட்டப்பட்டவாறு தயார்நிலையில் நிற்கவேண்டும்.
- நடுவர் ஒரு இலக்கத்தினை அழைக்கும் போது அந்த இலக்கத்திற்குரிய சோடிகள் (இரு அணிகளினதும் வீரர்கள்) மைதானத்தின் நடுவில் வைக்கப்பட்டிருக்கும் குழையை எடுப்பதற்கான முயற்சியை ஆரம்பிக்கவேண்டும். அவர்களுக்கு வழங்கப்படும் 1 நிமிடத்திற்குள் அவர்கள் குழையை எடுக்கத்தவறின் அடுத்த இலக்கத்திற்கான அழைப்பு விடுக்கப்படும்.
- ஒரே நேரத்தில் இரு வீரர்களும் குழையை எடுக்கும் சந்தர்ப்பம் ஏற்படுமாயின் போட்டி நடுவரால் நிறுத்தப்பட்டு மீண்டும் முயற்சிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும். குழையை எடுத்துக்கொண்டு ஓடும் போது குழை தவறி விழுந்தால் அதனை இருவரில் எவரும் எடுத்துக்கொண்டு ஓடலாம்.
- குழையை எடுப்பவர் குழையினை எடுத்துக்கொண்டு எதிர்தரப்பு வீரரிடம் அடிவேண்டாது தனது எல்லைக்குள் ஓடிச் சென்றால் அவர் சார்ந்த குழுவுக்கு 5 புள்ளிகள் வழங்கப்படும். அதேபோன்று குழையை எடுப்பவரை, குழையை எடுக்கும் போதோ அல்லது குழையை எடுத்துக்கொண்டு தனது எல்லைக்குள் ஓடிச்செல்வதற்கு முன்னதாகவோ எதிர்தரப்பு வீரர் அடித்தால் எதிர்தரப்புக்கு 3 புள்ளிகள் வழங்கப்படும்.
- போட்டியின் முடிவில் கூடிய புள்ளிகளைப் பெறும் அணி வெற்றி பெற்றதாகக் கருதப்படும்.
- போட்டியின் முடிவில் இரு அணிகளும் சமமான புள்ளிகளைப் பெறும் பட்சத்தில் எந்த அணி அதிகூடிய தடவைகள் குழையை எடுத்துக்கொண்டு சென்றதோ அவ்வணியே வெற்றியைத் தழுவியதாகக் கருதப்படும்.
- குழு நிலைப் போட்டியின் இறுதியில் இரு அணிகள் சமமான புள்ளிகளைப் பெறும் பட்சத்தில், அவ்வணிகளுக்கிடையிலான போட்டியில் எவ்வணி வெற்றி பெற்றிருந்ததோ அவ்வணியே வெற்றியைத் தழுவியதாகக் கருதப்படும்.
- குழு நிலைப் போட்டியின் இறுதியில் இரண்டிற்கு மேற்பட்ட அணிகள் சமமான புள்ளிகளைப் பெறும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட அணிகள் தமக்கிடையிலான போட்டியில் பெற்ற புள்ளிகளின் வித்தியாசம் கவனத்திற் கொள்ளப்படும். அவற்றிலும் சம நிலை உருவாகும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட அணிகளில் எந்த அணி அதிக புள்ளிகள் பெற்றதோ அவ்வணி வெற்றியைத் தழுவியதாகக் கருதப்படும். அவற்றிலும் சம நிலை உருவாகும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட அணிகளில் எந்த அணி குறைந்தளவு புள்ளிகளை எதிர் அணிகளிடமிருந்து பெற்றதோ அவ்வணி வெற்றியைத் தழுவியதாகக் கருதப்படும்.
- இப்போட்டிகளின் நிறைவில் வெற்றி பெற்ற முதல் மூன்று அணிகளுக்கு வழமையான பொது விளையாட்டுகளுக்கு வழங்கப்படும் 15, 10, 5 என்ற புள்ளிகள் வழங்கப்படும்.
- குழு நிலையில் ஏதாவது ஒரு அணி(யை) அல்லது அணிகள்(ளை) முறைகேடு காரணமாக இப்போட்டிகளிலிருந்து விலகும் அல்லது விலக்கும் பட்சத்தில் அவ்வணி அல்லது அணிகள் பெற்ற புள்ளிகள் யாவும் இப்போட்டிகளிலிருந்து நீக்கப்படும்.
- காலிறுதி, அரையிறுதி, இறுதிப் போட்டிகளில் ஏதாவது ஒரு அணி(யை) முறைகேடு காரணமாக இப்போட்டிகளிலிருந்து விலகும் அல்லது விலக்கும் பட்சத்தில் மற்றய அணி வெற்றியைத் தழுவியதாகக் கருதப்படும்.
- நடுவரின் தீர்ப்பே இறுதியானது.